# மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 291/2015 மற்றும் 295/2015** **நாள். 11.04.2023**

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ம் நாள் மனுதாரர் தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லிங்கேஸ்வரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | பொன்னுசாமி | சாதி | |
| கிராமம் | மேல்அத்திபாக்கம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 37 |

**ம..சா.3**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-3 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 3** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

ஆவணங்கள் எதுவும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

I. நான் கோழிப்பண்ணையில் பராமரிப்பு காவலராக வேலை செய்து வருகிறேன். கோழிப்பண்ணையில் காலை 6 மணி யில் இருந்து மாலை 5 மணி வரை செய்வேன். கோழிபண்ணை உரிமையாளர் பெயர் ஏழுமலை . நீர்பெருந்தகரம் முதல் வெள்ளிமேடு பேட்டை செல்லும் சாலையில் இருந்து அரை கிலோ மீட்டர் தள்ளி உள்ளே கோழிப்பண்ணை உள்ளது. கோழிபண்ணையில் வேலை செய்திருக்கும் போது ரோட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாது என்றால் சரிதான். விபத்தில் முருகன் என்பவருக்கு டாடா ஏசி வாகனம் மோதி காயம் ஏற்பட்டது. டாடா ஏசி வாகனத்தின் பதிவு எண் TN 07 AR 8873 ஆகும். இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றதை பார்த்தேன். பார்த்திபன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார். அவரை எனக்கு தெரியும். டாடா ஏசி

வாகனம் இருசக்கர வாகனத்திற்கு எதிரே வந்தது. இருசக்கர வாகனத்தில் 3 நபர்களாக வேகமாக சென்று எதிரே டாடாஏசி வாகனம் வளைவில் வருவதை பார்த்து இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் அவர்களாகவே கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக முனுசாமி என்பவர் புகார் கொடுத்தார். புகார் கொடுத்த முனுசாமி என்பவரை எனக்கு தெரியும். முனுசாமி விபத்தை நேரில் பார்த்தார். முனுசாமி TN 07 AR8873 என்ற டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக புகார் கொடுத்தார். விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்தில் யாருக்கும் உயிரிழப்பு இல்லை என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்டவர் உயிருடன் இருப்பதால் விபத்து ஏற்பட்டதை அவர்களால் சொல்லமுடியும் என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்டவர்கள் விபத்து எப்படி ஏற்பட்டது என்று சொல்லிவிட்டார்கள் என்றாலும், விபத்தில் காயம்பட்டவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.